**ஆகஸ்ட் – 21**

# TNPSC துளிகள்

- இமாச்சலப் பிரதேசம் மற்றும் லடாக் இடையே 5,578 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள பரங் லா கணவாயைக் கடக்கும் வகையில், 28 பெண் என்.சி.சி (தேசிய மாணவர் படை உறுப்பினர்கள்) பங்கேற்கும் 250 கி.மீ தொலைவு கொண்ட 'அபராஜிதா - பரங் லா 2026' மலையேற்றப் பயணத்தை மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கி வைத்தார்.
    - பரங் லா கணவாய் என்பது டிரான்ஸ்-இமயமலைப் பிராந்தியத்தில் அமைந்துள்ள ஒரு அதி உயரக் கணவாயாகும்; இது இமாச்சலப் பிரதேசம் மற்றும் லடாக்கை இணைக்கும் முக்கியப் புவியியல் அம்சமாகும்.
- துபாயைச் சேர்ந்த 16 வயதான லட்சுமணன் மெய்யப்பன், 16 ஆண்டுகள் 141 நாட்களில் உலகின் மிகவும் இளைய வயது ஆண் பட்டயக் கணக்காளர் என்ற கின்னஸ் உலக சாதனையைப் படைத்துள்ளார்.
- போட்டித் தேர்வுகளுக்குத் தயாரிக்கும் மாணவர்களுக்காக ₹20 லட்சம் செலவில் 'வெற்றிப் பாதை' செயலியை தமிழ்நாடு அரசு உருவாக்கவுள்ளது.
    - இச்செயலி பணியாளர் தேர்வாணையம் (SSC), ரயில்வே தேர்வு வாரியம் (RRB), வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் (IBPS) மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) ஆகியவை நடத்தும் தேர்வுகளை உள்ளடக்கும்.
- தமிழ்நாடு முதலமைச்சர் சி. ஜோசப் விஜய், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு (MLAs) அதிகாரப்பூர்வ வாகனங்கள் மற்றும் எரிபொருள், ஓட்டுநர் மற்றும் வாகனச் செலவுகளுக்காக ₹75,000 உட்பட மாதம் ₹1 லட்சம் படி வழங்கப்படும் என அறிவித்து உள்ளார்.
    - மீதமுள்ள ₹25,000 தொகுதிப் பணிகளுக்காக தனிச் செயலாளரை நியமிக்க வழங்கப் படும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு சுகாதாரக் காப்பீட்டு விரிவாக்கம்

**TN Assembly: Annual coverage under CM Health Insurance hiked to Rs 25 lakh**

Tamil Nadu Chief Minister C Joseph Vijay on Wednesday announced an increase in the annual coverage under the Chief Minister's Comprehensive Health Insurance Scheme from Rs 5 lakh to Rs 25 lakh.

- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் காப்பீட்டுத் தொகையை தமிழ்நாடு அரசு ₹5 லட்சத்தில் இருந்து ₹25 லட்சமாக உயர்த்தி உள்ளது.

- திருநங்கைகளுக்கான மருத்துவச் சேவைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் வழங்கப்படும்.
- இம்மருத்துவமனைகள் திருநெல்வேலி, தூத்துக்குடி, செங்கல்பட்டு, திருவாரூர், தர்மபுரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.
- பெரம்பூரில் ₹300 கோடி செலவில் 400 படுக்கைகள் கொண்ட பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டப்படும்.
- முதலமைச்சரின் புற்றுநோய் பராமரிப்புத் திட்டம் ₹673.44 கோடி செலவில் மேம்படுத்தப் படும்.
- ₹351 கோடி செலவில் ஏழு செவிலியர் கல்லூரிகள் மற்றும் செவிலியர், மருந்தியல் மற்றும் துணை மருத்துவப் படிப்புகளில் கூடுதல் இடங்கள் உருவாக்கப்படும்.

## தமிழ்நாடு சாலைப் பாதுகாப்புத் திட்டம்

- சாலை விபத்து மரணங்களைக் குறைக்க தமிழ்நாடு அரசு ஆண்டுக்கு ₹500 கோடி செலவில் முதலமைச்சரின் சாலைப் பாதுகாப்பு இயக்கத்தைத் தொடங்கும்.
- இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான சாலை விபத்துகள் நடக்கும் மாநிலமாக தமிழ்நாடு பதிவாகியுள்ளது.
- அதிவேகம் மற்றும் போக்குவரத்து விதிமீறல்களைக் கண்டறிய மாநில மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் தானியங்கி வாகன எண் பலகை கண்டறிதல் (ANPR) கேமராக்கள் பொருத்தப்படும்.
- வழித்தட விபத்து மீட்பு மற்றும் அவசரச் சேவைத் திட்டத்தின் கீழ், 25 அரசு மருத்துவ மனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அவசர கால உதவி மையங்களாக மேம்படுத்தப்படும்.
- 25 விபத்துப் பகுதிகள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு, இந்த மருத்துவ வசதிகளுடன் இணைக்கப் படும்.




## தமிழ்நாடு திறமை ஆராய்ச்சிப் பிரிவு

- எதிர்கால ஒலிம்பிக் போட்டிகளுக்கான இளம் விளையாட்டுத் திறமையாளர்களைக் கண்டறிந்து பயிற்சி அளிப்பதற்காக தமிழ்நாடு அரசு 'திறமை ஆராய்ச்சிப் பிரிவை' அமைக்கும்.

- இப்பிரிவு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SDAT) கீழ் ₹5 கோடி செலவில் நிறுவப்படும்.
- இது 8 முதல் 18 வயது வரையிலான திறமையான சிறுவர், சிறுமிகளைக் கண்டறிந்து பயிற்சி அளிக்கும்.
- ₹15 கோடி செலவில் 10 ஒலிம்பிக் சிறப்பு மையங்கள் நிறுவப்படும்.
- சென்னையில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் சிறப்பு மையம் மற்றும் SDAT ஒலிம்பிக் ஹவுஸ் அமைக்கப்படும்.
- தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒலிம்பிக் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஒலிம்பிக் தங்கம் வெல்பவர்களுக்கான ரொக்கப் பரிசு ₹3 கோடியில் இருந்து ₹5 கோடியாக உயர்த்தப் படும்.




## தமிழ்நாட்டில் அதிகரிக்கப் பட்ட பயிர்க்கடன் தள்ளுபடி




- தமிழ்நாடு முதலமைச்சர், குறு, சிறு மற்றும் பிற விவசாயிகளுக்கான பயிர்க்கடன் தள்ளுபடி வரம்பை ₹50,000-லிருந்து ₹75,000 ஆக உயர்த்தி அறிவித்தார்.
- ₹75,000 முதல் ₹1 லட்சம் வரையிலான கடன்களுக்கு அதிகபட்சமாக ₹75,000 தள்ளுபடி செய்யப் படும்.
- ₹1 லட்சத்திற்கு மேற்பட்ட கடன்களுக்கு அதிகபட்சமாக ₹35,000 தள்ளுபடி வழங்கப் படும்.
- சுமார் 13.34 லட்சம் விவசாயிகளுக்கு மொத்தம் ₹6,220 கோடி பயிர்க்கடனை அரசு தள்ளுபடி செய்யும்.

- ❖ முந்தைய தள்ளுபடி தொகையான ₹5,932.23 கோடியில், ₹5,267 கோடி ஏற்கனவே 13.34 லட்சம் விவசாயிகளின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்த கூடுதல் தள்ளுபடி அரசுக்கு சுமார் ₹953.06 கோடி கூடுதல் செலவை ஏற்படுத்தும் என்ற நிலையில் இது தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 110-இன் கீழ் அறிவிக்கப்பட்டது.

## தமிழ்நாட்டில் அதிகரிக்கப் பட்ட அகழாய்வு நிதி

- ❖ தொல்பொருள் ஆய்வுகள், அகழாய்வுகள் மற்றும் நீருக்கடி ஆய்வுகளுக்கான வருடாந்திர ஒதுக்கீட்டை தமிழ்நாடு அரசு ₹7 கோடியில் இருந்து ₹10 கோடியாக உயர்த்தியுள்ளது.
- ❖ தொல்பொருட்கள் மற்றும் அகழாய்வு மாதிரிகளை அறிவியல் பூர்வமாக பகுப்பாய்வு செய்ய ₹2 கோடி செலவில் நவீன தொல்லியல் ஆய்வகம் அமைக்கப்படும்.
- ❖ தமிழ் மரபுப் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ், முதற்கட்டமாக 76 பாதுகாக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் தொல்லியல் இடங்கள் ஐந்து ஆண்டுகளில் சீரமைக்கப்படும்.
- ❖ பண்டைய தமிழ் கல்வெட்டுகளை மக்கள் எளிதில் புரிந்து கொள்ள செயற்கை நுண்ணறிவைப் (AI) பயன்படுத்தி டிஜிட்டல் தரவுதளம் உருவாக்கப்படும்.
- ❖ பண்டைய தமிழர்களின் கடல்சார் வணிகத் தொடர்புகள் மற்றும் பண்டைய துறைமுகங்களை ஆவணப்படுத்த மூன்று ஆண்டு ஆராய்ச்சிக்கு ₹3 கோடி செலவிடப் படும்.
- ❖ மாநில அரசு 15 வரலாற்று சிறப்புமிக்க இடங்களைக் கண்டறிந்து, அவற்றைப் பாதுகாக்கப் பட்ட தொல்லியல் இடங்களாக அறிவிக்கும்.




## தென்னக மண்டலக் குழு கூட்டம் 2026

- ❖ தமிழ்நாட்டின் மகாபலிபுரத்தில் நடைபெற்ற 31வது தென்னக மண்டலக் குழுவின் கூட்டத்திற்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமை தாங்கினார்.
- ❖ இந்தக் குழுவில் ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு மற்றும் தெலங்கானா ஆகிய மாநிலங்களும், புதுச்சேரி, அந்தமான் நிக்கோபார் தீவுகள் மற்றும் லட்சத்தீவுகள் ஆகிய ஒன்றியப் பிரதேசங்களும் இடம்பெற்றுள்ளன.
- ❖ மத்திய அரசு மற்றும் தென்னக மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பு தேவைப்படும் பிரச்சனைகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது.

- மாநிலங்கள் மறுசீரமைப்புச் சட்டம், 1956-இன் பிரிவுகள் 15 முதல் 22 வரை தென்னக மண்டலக் குழு உருவாக்கப்பட்டு மத்திய-மாநில மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான விவாதங்களுக்கான மன்றமாகச் செயல்படுகிறது.
- இது பிராந்தியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கும், கூட்டுறவை மேம்படுத்துவதற்குமான ஓர் ஆலோசனை அமைப்பாகச் செயல்படுகிறது.




## தேசியச் செய்திகள்

### இந்தியாவின் எருமை இறைச்சி ஏற்றுமதி




- 2025–26 ஆம் ஆண்டில் இந்தியாவின் எருமை இறைச்சி ஏற்றுமதி 25.6% உயர்ந்து 5.1 பில்லியன் டாலரை எட்டியுள்ளதுடன் இது நாட்டின் சிறந்த வேளாண் ஏற்றுமதிப் பொருளாக மாறியுள்ளது.

- 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலத்தில் ஏற்றுமதி 66.6% உயர்ந்து கிட்டத்தட்ட 1.5 பில்லியன் டாலராக இருந்தது, சராசரி மதிப்பு டன் ஒன்றுக்கு $4,392 ஆக உயர்ந்தது.
- வியட்நாம் மற்றும் மலேசியாவுடன் எகிப்து, உஸ்பெகிஸ்தான், இந்தோனேசியா, ஈராக் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளும் முக்கிய கொள்முதல் நாடுகளாக மாறியதன் மூலம் ஏற்றுமதி சந்தைகள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன.
- இந்தியாவில் ஏற்றுமதிக்காக APEDA-ஆல் அங்கீகரிக்கப்பட்ட 83 ஒருங்கிணைந்த இறைச்சிக் கூடங்கள் மற்றும் இறைச்சி பதப்படுத்தும் ஆலைகள் உள்ளன.
- எருமை இறைச்சியானது ஏற்றுமதி, வயதான, மலட்டுத்தன்மை கொண்ட அல்லது குறைந்த பால் தரும் எருமைகளுக்குச் சந்தையை வழங்குவதன் மூலம் பால் பண்ணைத் துறைக்கு ஆதரவு அளிப்பதுடன் இது விவசாயிகள் அவற்றை மாற்றி உற்பத்தி திறன் கொண்ட விலங்குகளை வாங்க உதவுகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## ஐரோப்பிய ஒன்றியத்தின் கார்பன் வரி – பிரிக்ஸ்




- புதுடெல்லியில் நடைபெற்ற 12-வது கூட்டத்தில், ஐரோப்பிய ஒன்றியத்தின் எல்லைக் கார்பன் சரிசெய்தல் பொறிமுறைக்கு (CBAM) பிரிக்ஸ் (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா) சுற்றுச்சூழல் அமைச்சர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.
- இத்தகைய எல்லைக் கார்பன் நடவடிக்கைகள் வளரும் நாடுகளின் பருவநிலை நடவடிக்கை மற்றும் மீள்தன்மை முயற்சிகளைப் பாதிக்கும் என்று பிரிக்ஸ் கூறியது.
- CBAM என்பது இரும்பு மற்றும் எஃகு, அலுமினியம், சிமெண்ட், உரங்கள், ஹைட்ரஜன் மற்றும் மின்சாரம் போன்ற அதிக கார்பன் உமிழ்வு கொண்ட இறக்குமதிகளை உள்ளடக்கியது.
- வளரும் நாடுகள் பருவநிலைத் தாக்கங்களைச் சமாளிக்க உதவ, வளர்ந்த நாடுகளிடமிருந்து பருவநிலைத் தணிப்பு நிதி அதிகரிப்பை அமைச்சர்கள் கோரினர்.
- வளரும் நாடுகளின் நிதிச் சுமையைக் கூட்டாமல், மானியங்கள் மற்றும் சலுகைக் கடன்கள் மூலம் நிதியை வழங்குமாறு வளர்ந்த நாடுகளை அவர்கள் வலியுறுத்தினர்.

- 2035 ஆம் ஆண்டிற்குள் தழுவல் நிதியை மும்மடங்காக உயர்த்தும் வாக்குறுதியை வளர்ந்த நாடுகள் நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்தியாவின் முதல் வணிகரீதியான புவிக் கண்காணிப்பு செயற்கைக்கோள் கூட்டமைப்பு

- பொது-தனியார் பங்களிப்பு (PPP) மாதிரியின் கீழ் இந்தியாவின் முதல் முழுமையான வணிக ரீதியான உள்நாட்டு புவிக் கண்காணிப்பு (EO) செயற்கைக்கோள் கூட்டமைப்பிற்கு IN-SPACe ஒப்புதல் அளித்துள்ளது.
- பிக்சல் ஸ்பேஸ் இந்தியா தலைமையிலான அலைடு ஆர்பிட்ஸ் பிரைவேட் லிமிடெட் கூட்டமைப்பில் துருவா ஸ்பேஸ், பியர்சைட் ஸ்பேஸ் மற்றும் சாட்சூர் அனலிட்டிக்ஸ் இந்தியா ஆகிய நிறுவனங்கள் அடங்கும்.
- இந்தக் கூட்டமைப்பு 2029 ஆம் ஆண்டிற்குள் 12 செயற்கைக்கோள்களை உருவாக்கி இயக்குவதற்கு ₹1,200 கோடிக்கு மேல் முதலீடு செய்யும்.
- இந்தச் செயற்கைக்கோள்கள் பான்குரோமாடிக், மல்டிஸ்பெக்ட்ரல், ஹைப்பர் ஸ்பெக்ட்ரல் மற்றும் செயற்கை துளை ரேடார் (SAR) படங்களை வழங்கும்.
- அனைத்து செயற்கைக் கோள்களும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டு, இந்திய ஏவூர்திகள் மூலம் விண்ணில் செலுத்தப்படும்.




## பாக்டீரியா எதிர்ப்புத் திறன் கொண்ட எலும்புப் பொருத்துதல்/உள்வைப்பு

- இந்தியத் தொழில்நுட்பக் கழகம் (IIT) மண்டியின் ஆராய்ச்சியாளர்கள், முப்பரிமாண (3D) அச்சு முறையில் தயாரிக்கப்பட்ட எலும்புப் பொருத்துதல்களுக்கான (bone implants), உயிரியல் அமைப்பால் ஈர்க்கப்பட்ட ஒரு பூச்சினை உருவாக்கியுள்ளனர்.

- இப்பூச்சு கடல் முள்ளெலிகளைப் போன்ற சிறிய ஹைட்ராக்ஸியபடைட் அமைப்புகளைப் பயன்படுத்துகிறது மற்றும் பாக்டீரியாக்களை இயந்திரத்தனமாக சேதப்படுத்தும் திறன் கொண்டது.
- இந்த உள்வைப்புகள் பாலில்லாட்டிக் அமிலம் (PLA) என்ற மட்கக்கூடிய நெகிழியைப் பயன்படுத்துகின்றன, ஆனால் இதன் மேற்பரப்பு எலும்புகளுடன் எளிதில் பிணைக்கப்படுவதில்லை.
- புதிய பூச்சு எலும்பு ஒருங்கிணைப்பை மேம்படுத்துகிறது மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பிகள் அல்லது வேதிப்பொருட்களைச் சார்ந்திருக்காமல் பாக்டீரியா தொற்றைக் குறைக்க உதவுகிறது.
- இந்த நுட்பத்தில் உள்வைப்பை காரக் கரைசலால் சிகிச்சை செய்து, பின்னர் 90°C வெப்பநிலையில் நீர்வெப்பச் சிகிச்சை அளிப்பதன் மூலம் ஊசி போன்ற ஹைட்ராக்ஸியபடைட் கொத்துகள் உருவாக்கப்படுகின்றன.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவின் முதல் புல்வெளிகள் வழிகாட்டி




- மங்கோலியாவின் உலான்பாத்தாரில் நடைபெற்ற பாலைவனமாதலை எதிர்ப்பதற்கான ஐக்கிய நாடுகள் சாசனத்தின் (UNCCD) COP17 மாநாட்டில்,

'இந்தியாவின் புல்வெளிகள் மற்றும் பிற திறந்தவெளி இயற்கை சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கான வழிகாட்டி' முதன்முறையாக வெளியிடப்பட்டது.

- இந்த வழிகாட்டி இந்தியாவின் புல்வெளிகள், சவானாக்கள், பாலைவனங்கள் மற்றும் பிற திறந்தவெளி இயற்கை சுற்றுச்சூழல் அமைப்புகளை உள்ளடக்கியது.
- இதில் அவற்றின் புவியியல், சூழலியல், பல்லுயிர் மற்றும் தொடர்புடைய சமூகங்கள் மற்றும் பழங்குடியினர் பற்றிய தகவல்கள் அடங்கியுள்ளன.
- காடுகளுடன் சேர்த்து இந்த சுற்றுச்சூழல் அமைப்புகளையும் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை இந்த வழிகாட்டி அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.
- இது கொள்கை வகுப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், பாதுகாப்பு அமைப்புகள், மேம்பாட்டு முகமைகள் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## தேசிய அனுபவ் விருதுகள் 2026

- புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில், தேசத்தைக் கட்டியெழுப்பிய பங்களிப்பிற்காக 15 பேருக்கு 'தேசிய அனுபவ் விருதுகள் 2026' வழங்கப்பட்டது.
- பாஸ்போர்ட்/கடவுச்சீட்டு சேவா கேந்திராக்கள், விதி சீர்திருத்தங்கள், தொழில்நுட்ப தழுவல் மற்றும் அரசு கணக்குகள் உள்ளிட்ட திட்டங்களில் விருது பெற்றவர்கள் பங்காற்றியுள்ளனர்.
- மத்திய அரசுப் பணியாளர்கள், ஓய்வுபெற்ற ஊழியர்கள், 12 பொதுத்துறை வங்கிகள் மற்றும் மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் தங்களது பணி அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள 'அனுபவ்' தளம் வழிவகை செய்கிறது.
- 'பென்ஷன் மித்ரா' கையேடு மற்றும் 5-வது தேசிய அளவிலான டிஜிட்டல் ஆயுள் சான்றிதழ் இயக்கத்திற்கான வழிகாட்டுதல்களும் வெளியிடப்பட்டன.
- ஓய்வூதிய நடைமுறைகளை எளிமைப்படுத்துவதற்கும் குடும்ப ஓய்வூதிய விதிகளை வலுப்படுத்துவதற்குமான சீர்திருத்தங்களை அரசு சுட்டிக் காட்டியது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★